# நுவரகம்பலாத்த கிழக்கு பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நுவரகம்பலாத்த கிழக்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்ட பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு மீதிகளின் கூட்டுப்பெறுமதிகளுக்கிடையே ரூபா 47,178 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ரூபா 6,229,327 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதி, பிழையான வகையில் பரீட்சை மீதியில் செலவுப் பக்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு முறைமையின் பிரகாரம் நிலையான சொத்துக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்குச் சமமமாக

இருக்க வேண்டிய போதிலும் அந்த இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 15,410,804 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) பரீட்சை மீதியின் பிரகாரம் திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 5,686,527 ஆக இருந்த போதிலும் பொதுப் பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 18,570,675 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 1,685,000 தொகையான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியும், ரூபா 558,650 தொகையான இயந்திர உபகரணங்களின் பெறுமதியும், ரூபா 279,400 தொகையான கணனியின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) டெக்ரர் மற்றும் டேலரின் பெறுமதி ரூபா 1,065,000 தொகை குறைவாகவும் நீர்ப் பம்பியின் பெறுமதி ரூபா 10,000 தொகை அதிகரித்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(எ) செலுத்த வேண்டிய ரூபா 143,171 தொகை அட்டுறு செலவினமாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,330,090 ஆக இருந்த போதிலும் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் அது ரூபா 5,091,265 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 2,761,175 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற ரூபா 6,267,986 தொகையான கடன் மற்றும் மானியமாகக் கிடைத்த ரூபா 10,853,426 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய கணக்கில் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,429,779 ஆக இருந்த போதிலும் பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,788,963 ஆக இருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 62,378,593 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,697,787 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 29,125 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி இல. 5(10) இன் பிரகாரம் வங்கி நடைமுறைக் கணக்கிற்காக 2011 செப்தெம்பர் மாதத்தின் பின்னர் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 மாதகாலத்தை விஞ்சிய ரூபா 11,596 கூட்டுத்தொகையான 03 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 264 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சீட்டிற்காக பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 45,478 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகளுக்காக பற்றுச்சீட்டு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய வங்கி சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 16,503 தொகையான மீதி 2002 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 557 | 661 | - |
| (ii) | வாடகை | 1,027 | 971 | 72 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 334 | 220 | 7 |
| (iv) | ஏனைய வருமானம் | 9,645 | 8,055 | 1,590 |

### 2.3.2 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(i) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக இனங்காணப்பட்ட பிரதேசங்கள் பிரசுரிக்கப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை கருத்திற்கொள்ளாது கடை வாடகை அறவிட்டமையின் காரணமாக ரூபா 38,400 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/கேஜீ/09/07/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான கடைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 11 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

**2.3.5 ஏனைய வருமானம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற குழாய்க் கிணறுகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 31,600 தொகையான கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,743,077 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,197,480 |

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட வேண்டிய விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமல் விழா மற்றும் தனிப்பட்ட உதவியாக ரூபா 119,422 கூட்டுத்தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) சபையில் வெற்றிடமான 15 பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 2,589,375 தொகை சம்பளம் மற்றும் படியாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனிதவள முகாமைத்துவம்